செ.வெ.எண்: 295 நாள்: 14.05.2019

**புதுக்கோட்டை மாவட்டத்தில் வருவாய்த்தீர்வாய நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளது.**

**மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

---

புதுக்கோட்டை மாவட்டத்தில் வருவாய்த்தீர்வாய நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளது. இதுகுறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்ததாவது.

புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள அனைத்து வருவாய் கிராமங்களிலும் கிராம நிர்வாக அலுவலர்களால் பராமரிக்கப்பட்டு வரும் வருவாய் கிராமக்கணக்குகளை ஒவ்வொரு வருடமும் அந்தந்த பசலியின் (வருடம்) இறுதி மாதத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர், மாவட்ட வருவாய் அலுவலர், மற்றும் துணை ஆட்சியர்களால் தணிக்கை செய்யப்பட்டு வருகிறது. அதேபோன்று, நடப்பு பசலி வருடத்திற்கு (1428) புதுக்கோட்டை மாவட்டத்தில் கீழ்கண்ட அலுவலர்களால் 06.06.2019 முதல் 1428-ஆம் பசலிக்கான கிராமக்கணக்குகள் தணிக்கை நடத்தப்படவுள்ளது.

1428-ஆம் பசலி ஆண்டு வருவாய்த் தீர்வாயம் (ஜமாபந்தி) மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் புதுக்கோட்டை வட்டாட்சியர் அலுவலகத்தில் 06.06.2019 வாராப்பூர் உள்வட்டத்திற்கும், 11.06.2019 அன்று புதுக்கோட்டை உள்வட்டத்திற்கும் வருவாய்த்தீர்வாயம் நடத்தப்படவுள்ளது.

மாவட்ட வருவாய் அலுவலர், புதுக்கோட்டை அவர்களால் குளத்தூர் வட்டாட்சியர் அலுவலகத்தில், 06.06.2019 அன்று நார்த்தாமலை உள்வட்டத்திற்கும், 11.06.2019 அன்று மாத்தூர் உள்வட்டத்திற்கும், 12.06.2019 அன்று கிள்ளுக்கோட்டை உள்வட்டத்திற்கும், 13.06.2019 அன்று குன்னண்டார்கோவில் உள்வட்டத்திற்கும், 18.06.2019 அன்று கீரனூர் உள்வட்டத்திற்கும் வருவாய்த்தீர்வாயம் நடத்தப்படவுள்ளது.

சிறப்பு மாவட்ட வருவாய் அலுவலர், நிலமெடுப்பு (தேசிய நெடுஞ்சாலை), புதுக்கோட்டை அவர்களால் அறந்தாங்கி வட்டாட்சியர் அலுவலகத்தில் 06.06.2019 அன்று அத்தாணி உள்வட்டத்திற்கும், 11.06.2019 அன்று நாகுடி உள்வட்டத்திற்கும், 12.06.2019 அன்று பூவத்தக்குடி உள்வட்டத்திற்கும், 13.06.2019 அன்று அரசர்குளம் உள்வட்டத்திற்கும், 18.06.2019 அன்று சிலட்டூர் உள்வட்டத்திற்கும், 19.06.2019 அன்று அறந்தாங்கி உள்வட்டத்திற்கும் வருவாய்த் தீர்வாயம் நடத்தப்படவுள்ளது.

வருவாய் கோட்ட அலுவலர், புதுக்கோட்டை அவர்களால் ஆலங்குடி வட்டாட்சியர் அலுவலகத்தில் 06.06.2019 அன்று வல்லநாடு உள்வட்டத்திற்கும், 11.06.2019 அன்று

கீரமங்கலம் உள்வட்டத்திற்கும், 12.06.2019 அன்று வெண்ணாவல்குடி உள்வட்டத்திற்கும், 13.06.2019 அன்று ஆலங்குடி உள்வட்டத்திற்கும் வருவாய்த்தீர்வாயம் நடத்தப்படவுள்ளது.

வருவாய் கோட்ட அலுவலர், அறந்தாங்கி அவர்களால் மணமேல்குடி வட்டாட்சியர் அலுவலகத்தில் 06.06.2019 அன்று பெருமருதூர் உள்வட்டத்திற்கும் 11.06.2019 அன்று கோட்டைப்பட்டிணம் உள்வட்டத்திற்கும், 12.06.2019 அன்று சிங்கவனம் உள்வட்டத்திற்கும் 13.06.2019 அன்று மணமேல்குடி உள்வட்டத்திற்கும் வருவாய்த்தீர்வாயம் நடத்தப்படவுள்ளது.

வருவாய் கோட்ட அலுவலர், இலுப்பூர் அவர்களால் இலுப்பூர் வட்டாட்சியர் அலுவலகத்தில், 06.06.2019 அன்று குடுமியான்மலை உள்வட்டத்திற்கும் 11.06.2019 அன்று சித்தன்னவாசல் உள்வட்டத்திற்கும், 12.06.2019 அன்று வீரப்பட்டி உள்வட்டத்திற்கும், 13.06.2019 அன்று இலுப்பூர் உள்வட்டத்திற்கும் வருவாய்த்தீர்வாயம் நடத்தப்படவுள்ளது.

மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலர், புதுக்கோட்டை அவர்களால் கந்தர்வகோட்டை வட்டாட்சியர் அலுவலகத்தில் 06.06.2019 அன்று புதுநகர் உள்வட்டத்திற்கும் 11.06.2019 அன்று கல்லாக்கோட்டை உள்வட்டத்திற்கும், 12.06.2019 அன்று கந்தர்வகோட்டை உள்வட்டத்திற்கும் வருவாய்த்தீர்வாயம் நடத்தப்படவுள்ளது.

மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர், புதுக்கோட்டை அவர்களால் கறம்பக்குடி வட்டாட்சியர் அலுவலகத்தில் 06.06.2019 அன்று மழையூர் உள்வட்டத்திற்கும், 11.06.2019 அன்று கறம்பக்குடி உள்வட்டத்திற்கும் வருவாய்த் தீர்வாயம் நடத்தப்படவுள்ளது.

மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர், புதுக்கோட்டை அவர்களால் பொன்னமராவதி வட்டாட்சியர் அலுவலகத்தில் 06.06.2019 அன்று காரையூர் உள்வட்டத்திற்கும், 11.06.2019 அன்று அரசமலை உள்வட்டத்திற்கும், 12.06.2019 அன்று பொன்னமராவதி உள்வட்டத்திற்கும் வருவாய்த்தீர்வாயம் நடத்தப்படவுள்ளது.

மாவட்ட ஆட்சியரின் கூடுதல் நேர்முக உதவியாளர் (நிலம்), புதுக்கோட்டை அவர்களால் ஆவுடையார்கோவில் வட்டாட்சியர் அலுவலகத்தில் 06.06.2019 அன்று பொன்பேத்தி உள்வட்டத்திற்கும், 11.06.2019 அன்று மீமிசல் உள்வட்டத்திற்கும், 12.06.2019 அன்று ஏம்பல் உள்வட்டத்திற்கும், 13.06.2019 அன்று ஆவுடையார்கோவில் உள்வட்டத்திற்கும் வருவாய்த்தீர்வாயம் நடத்தப்படவுள்ளது.

தனித்துணை ஆட்சியர் (ச.பா.தி), புதுக்கோட்டை அவர்களால் விராலிமலை வட்டாட்சியர் அலுவலகத்தில் 06.06.2019 அன்று கொடும்பாளூர் உள்வட்டத்திற்கு துவங்குகிறது. 11.06.2019 அன்று நீர்பழனி உள்வட்டத்திற்கும், 12.06.2019 அன்று விராலிமலை உள்வட்டத்திற்கும் வருவாய்த்தீர்வாயம் நடத்தப்படவுள்ளது.

உதவி ஆணையர் (கலால்), புதுக்கோட்டை அவர்களால் திருமயம் வட்டாட்சியர் அலுவலகத்தில் 06.06.2019 அன்று செங்கீரை உள்வட்டத்திற்கும், 11.06.2019 அன்று கீழாநிலை உள்வட்டத்திற்கும், 12.06.2019 அன்று கோட்டூர் உள்வட்டத்திற்கும், 13.06.2019 அன்று விராச்சிலை உள்வட்டத்திற்கும் 18.06.2019 அன்று திருமயம் உள்வட்டத்திற்கும் வருவாய்த் தீர்வாயம் நடத்தப்படவுள்ளது.

வருவாய்த் தீர்வாயம் குறிப்பிட்ட நாட்களில் காலை 10.00 மணிக்கு அந்தந்த வட்டாட்சியர் அலுவலகத்தில் துவங்கி நடைபெறும். கடைசி நாளன்று வருவாய்த் தீர்வாயம் முடிந்தவுடன் வருவாய்த் தீர்வாய அலுவலர் தலைமையில் குடிகள் கூட்டம் நடைபெறும். எனவே, பொதுமக்கள் அனைவரும் தங்களது கோரிக்கை மனுக்களை வருவாய்த் தீர்வாய அலுவலரிடம் கொடுத்து பயன்பெற வேண்டும். இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**